தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 8-5-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## மஞ்சள் பதப்படுத்தும் இயந்திரங்களின் செயல் விளக்கம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையத்தின் சார்பாக ஈரோடு மாவட்டம், கொடுமுடியில் உள்ள தாமிரபாளையம் கிராமத்தில் மஞ்சள் பதப்படுத்தும் இயந்திரங்களின் செயல்விளக்கம் கடந்த 23-4-2015 அன்று நடைபெற்றது.

நம் நாட்டில், அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சியின் - அறுவடை பின்சார் தொழில்நுட்பத் திட்டத்தின் கீழ், ஆந்திர பிரதேசத்தில் வடிவமைக்கப்பட்ட மஞ்சள் வேக வைக்கும் கருவி, ஒரிசாவின் மஞ்சள் கழுவும் இயந்திரம், மகாராஷ்டிராவின் வேளாண் கழிவுகளை உபயோகப்படுத்தி உலர்த்தும் உலர்த்தி, தமிழ்நாட்டின் மஞ்சள் மெருகிடும் கருவி ஆகியவை வடிவமைக்கப்பட்டு ஒரே இடத்தில் செயல் விளக்கம் செய்து காட்டப்பட்டது.

முனைவர் கு. அழகுசுந்தரம், துணை இயக்குநர் (வேளாண் பொறியியல்), இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம், புதுதில்லி, அவர்களின் முயற்சியினால் இத்தகைய நிகழ்வு ஏற்படுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் ஈரோடு மாவட்டத்தில் உள்ள 60க்கும் மேற்பட்ட முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டனர். முனைவர் வெ. திருப்பதி, ஆராய்ச்சி பொறியாளர் மற்றும் அறுவடை பின்சார் தொழில்நுட்ப திட்டத்தில் பணிபுரியும் விஞ்ஞானிகள் இந்த செயல் விளக்கத்திற்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்